**<u>O.S. 121/2016, 24.11.2021, 11.25 am</u>**

**பி.வா.சா.2, துரைசாமி, த/பெ.பரசுராமகவுண்டர், வயது 72**

**<u>முதல் விசாரணை :-</u>**

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், நரசிங்கபுரம் மதுரா, கல்லரப்பட்டி கிராமம், கல்கட்டு வட்டத்தில் வசிக்கும் இந்து விவசாயம் பயிர் ஜீவனம் மற்றும் இருப்பிடம் சுமார் 72 வயதுள்ள பரசுராமகவுண்டர் குமாரர் துரைசாமி ஆகிய நான் இதன் அடியிற் கண்ட சங்கதிகளை பிரமாணமாய் கூறுகிறேன்.

சத்தியமாக சொல்கிறேன். என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். 07.06.1973 தேதியிட்ட 4ம் பிரதிவாதி பெயரிலான கிரையப்பத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ.4 ஆகும். 4ம் பிரதிவாதி பெயரிலுள்ள பட்டா பாஸ்புக் பி.வா.சா.ஆ.5 ஆகும். 4ம் பிரதிவாதி பெயரிலுள்ள கணினி சிட்டா பி.வா.சா.ஆ.6 ஆகும். 4ம் பிரதிவாதி பெயரிலான நிலவரி ரசீது பி.வா.சா.ஆ.7 ஆகும். தாவாவை தள்ளுபடி செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.